தமிழ்நாட்டு நலனுக்காக எந்தவித உறுதியையும் கேட்காமல் –

# பா.ஜ.க.விடம் அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்துவிட்டார் எடப்பாடி பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



**சென்னை, ஏப்.13-**

**தமிழ்நாட்டு நலனுக்கான எந்தவித உறுதியையும் பா.ஜ.க. விடம் கேட்காமல் அடிமை சாசனம் எழுதி கொடுப்பது போல கூட்டணிக்கு சரி என தலையாட்டி பொம்மையாய் பேச்சின்றி தலையை மட்டும் ஆட்டி கூட்டணியை உறுதி செய்துள்ளார் பழனிசாமி என சட்டத்துறை அமைச்சர் ரகுபதி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

இரண்டு ரைடுகளுக்கு அரண்டு போய் அமித்ஷா முன்னிலையில் ஒரு வார்த்தை கூடபேசாமல் தலையாட்டி பொம்மை போல அமர்ந்து கூட்டணியை உறுதி செய்த பழனிசாமியின் யோக்கியதையை முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிவிட்டார் என்றவுடன் ரோஷம் வாந்தவரைப் போல வீண் அவதூறுகளை மட்டும் அள்ளி விட்டு எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார் பழனிசாமி.

பாரபட்சமான GST வரிப் பகிர்வை ஏற்றுக்கொண்டு பொருளாதார உரிமையை விட்டுக்கொடுத்தது, உதய் மின்திட்டத்தில் கையெழுத்திட்டு மின்கட்டண நிர்ணய உரிமையை விட்டு கொடுத்தது, CAA வை ஆதரித்து முஸ்லீம் மக்களின் முதுகில் குத்தியது இப்படி தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய பாஜகவிடம் விட்டுக்கொடுத்தது அடிமை அதிமுக ஆட்சியில் தான்.

அதோடு அடிமை அதிமுக ஆட்சியில் தான் நீட் நுழைவு தேர்வு தமிழ்நாட்டில் திணிக்கப்பட்டது என்பது தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பாஜக கூட்டணியில் ஒட்டிக் கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்தவர் பழனிசாமி. சரி இப்போதாவது அதற்கு பிராயச்சித்தம் செய்யும் வகையில் நீட் விலக்களித்தால் கூட்டணி வைக்கிறேன் என்றாவது பாஜக அரசிடம் வலியுறுத்தினாரா அதுவும் இல்லை. எந்த வித நிபந்தனையும் பழனிசாமி விதிக்கவில்லை என்று அமித்ஷா அவர்களே போட்டுடைத்துவிட்டார்.

இப்படி தமிழ்நாட்டு நலனுக்கான எந்தவித உறுதியையும் பாஜகவிடம் கேட்காமல் அடிமை சாசனம் எழுதி கொடுப்பது போல கூட்டணிக்கு சரி என தலையாட்டி பொம்மையாய் பேச்சின்றி தலையைமட்டும் ஆட்டி கூட்டணியை உறுதி செய்துள்ளார் பழனிசாமி.

இதை முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டை அடமானம் வைக்க துடிக்கிறார்கள் என்று கூறியதில் என்ன தவறு.

ஏதோ "குறைந்தபட்ச செயல்திட்டம்" உள்ளது என்கிறார். அந்த ரகசியத்தை எப்போது சொல்வார்கள் தேர்தல் முடிந்த பின்னா..? அந்த செயல்திட்டத்தில் தமிழ்நாட்டு மக்கள் நலன் சார்ந்த செயல்திட்டம் உள்ளதா..? நீட் தேர்வு விலக்கு, மும்மொழி என்ற இந்தி திணிப்பு, மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை , நிதி பகிர்வில் பாரபட்சம் இப்படியான ஒன்றிய பாஜக அரசின் வஞ்சகத்திற்கு என்ன செயல் திட்டத்தை மேற்கொள்ள போகிறார் பழனிசாமி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேள்வி கேட்டால் அதற்கு பதில் சொல்ல துப்பில்லை.

"சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வருவதற்கு" மக்கள் நலனைப் பற்றி பழனிசாமி சிந்தித்தால் தானே அதை பற்றி செயல்திட்டம் வகுக்க.. உங்களது அந்த செயல்திட்டம் எல்லாம் இனி அமலாக்கத் துறை அ.தி.மு.க.வினர் வீட்டுக்கதவை தட்டக் கூடாது என்பதுதான் என தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். துரோகி அ.தி.மு.க.வும், விரோதி பா.ஜ.க.வும் சேர்ந்த கூட்டணியை வரும் தேர்தலில் விரட்டி அடிப்பார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

இவ்வாறு - அப்பதிவில் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பழைய பல்லாவரம் பகுதிகளில் தொடர் குறைந்த மின்னழுத்தம் காரணமாக பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டதை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வைத்த கோரிக்கையை ஏற்று ரூ1.01 கோடி மதிப்பீட்டில் மின்மாற்றிகளை இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். உடன் மின்வாரிய அதிகாரிகள், இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயகுமார், மு. ரஞ்சன், கோ. ஜானகிராமன், ச.சிவகுமார், மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனம் அரசுக்கு அதிகாரம் மாறியது; ஆளுநரிடம் இருந்து அகன்றது!

# உச்சநீதிமன்றத்தின் நல்ல தீர்ப்புக்கு வரவேற்பு - போராடிப் புகழ் பெற்ற முதலமைச்சருக்குப் பாராட்டு!

## சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் அறிக்கை!



*சென்னை, ஏப்.13-*

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமனம் செய்யும் அதிகாரம் வேந்தராக உள்ள ஆளுநரிடமிருந்து விலக்கப்படுகிறது. அவருக்குப் பதில் அரசே பல்கலைக்கழகத் துணை வேந்தர்களைப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி நியமனம் செய்யும் அதிகாரத்தை ஏற்கிறது. தமிழ்நாடு சட்டமன்ற முன் வரைவிற்கு ஒப்புதல் அளித்துச் சட்டம் ஆக்கி ஆணை பிறப்பித்துள்ள உச்சநீதிமன்றம் நல்ல தீர்ப்பையே வழங்கியுள்ளது.

ஆளுநருக்கு உள்ள அளவான அதிகாரத்தைத் தெளிவுபடுத்தவும், சட்டமன்றத்திற்கு உள்ள இறையாண் மையை உறுதிப்படுத்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் வழக்குத் தொடுத்து நல்ல தீர்ப்புக்கு வழி செய்துள்ளார். மாநிலத் தன்னாட்சிக்கு மணி முடி சூட்டி யுள்ளார். மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியுள்ளார். அவருடைய போராட்ட உணர்வைப் பாராட்டுகின்றது பல்கலைக்கழக ஆசிரியர் உலகம்.

இது குறித்து, சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவையின் மேனாள் தலைவரும், ஒய்வு பெற்ற ஆசிரியர் பேரவையின் இந்நாள் தலைவருமான பேராசிரியர் மா.செல்வராசன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகின்றார்.

பல்கலைக்கழகம் என்ற உயர்கல்வி அமைப்பை ஆங்கிலேய அரசே இந்தியாவில் முதன் முதல் 1857-ஆம் ஆண்டு உருவாக்கியது. ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் தொடங்கி 600 ஆண்டுகளுக்குப் பிறகே பல்கலைக்கழகம் என்ற எண்ணமும் செயலும் இந்தியாவில் தொடங்கின. அப்படி உருவாக்கப்பட்ட முதல் மூன்று பல்கலைக்கழகங்களுள் ஒன்று பெருமைக்குரிய சென்னைப் பல்கலைக்கழகம். ஆங்கிலேயர் காலத்திலிருந்து அவர்கள் வசதிக்கு ஏற்ப ஆங்கில ஆளுநர் ஒருவரே பல்கலைக்கழக வேந்தராக ஆட்சி புரிந்து வந்தார். இந்தியா விடுதலை பெற்ற பிறகும் ஆளுநரை வேந்தர் பொறுப்பில் இருந்து அகற்றும் எண்ணம் ஒன்றிய அரசுக்கு எழவில்லை.

ஒரு மாநிலத்தின் ஆளுநராக வேறு ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர் பொறுப்பேற்பதே நடைமுறையாக உள்ளது. இதனால் மாநில நிலைமையை புரிந்துகொள்ளும் மனநிலையை வெளியில் இருந்துவரும் ஆளுநர் பெறுவதில்லை. எனவே மாநிலக் கல்வி வளர்ச்சிக்கு மாறான செயல்களில் ஆளுநர் சிலர் ஈடுபடுவது வழக்கம் ஆகிவிட்டது. அவர்களுள் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி முதன்மையானவர். அரசியல் சட்டத்திற்கும் ஆட்படாமல், அறநெறிக்கும் கட்டுப்படாமல் தானே எல்லாம் என்று தான்தோன்றித்தனமாகச் செயற்பட்ட வேந்தர் என்ற விழுமிய நிலையை வில்லங்கம் ஆக்கிவிட்டார்.

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் துணைவேந்தர் இல்லாத துயரநிலை பல மாதங்களாகத் தொடர்கின்றது. குறிப்பாக மூத்த முதல் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு இரண்டு ஆண்டுகளாகத் துணைவேந்தர் இல்லா இழிநிலை தொடர்கிறது. இதற்குத் தமிழ்நாட்டு உயர் கல்வி வளர்ச்சியில் ஒரு சிறிதும் அக்கறை இல்லாத ஆளுநரின் அடாவடி முடிவே காரணம். இவருடைய பொறுப்பற்ற போக்கால் பல்கலைக்கழக நிருவாகமே படுகேடாகப் பாதிக்க ப்பட்டுள்ளது. ஆசிரியர்களும், மாணவர்களும் அன்றாடம் அல்லல் படுகின்ற அவல நிலைதான்! இவரோ வீடு எரியும்போது வீணை மீட்டி விம்மிதம் கொள்ளும் வேந்தனி போல், இருக்கின்றார்.

அயல் மாநிலத்தவரை, தமிழ் அறியாதவரை, குறிப்பாக அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமனம் செய்து தமிழ்நாட்டின் அறிவு, ஆராய்ச்சித்திறனை, கல்வி ஆழத்தை அவமானப்படுத்திய பாரதிய ஜனதா அரசின் பரம சீடராகவே பதவியில் ஆட்டம் போடுகின்றார் ஆளுநர்.

அடங்காமல் மதம் பிடித்து அலையும் யானையின் மத்தகலத்தில் அமர்ந்த மாவுத்தன் அங்குசத்தால் அடக்குவதுபோல் முதலமைச்சர் உச்சநீதிமன்றத் தீர்ப்பு எனும் முத்துக்கருவியால் ஆளுநரை வழிக்குக் கொண்டு வந்துவிட்டார். சட்டம் எனும் கொட்டகையில் தீர்ப்பெனும் சங்கிலியால் பிணிக்கப்பட்ட யானை போல் ஆகிவிட்டார் ஆளுநர்!.

துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநரிடம் இருந்தால்தானே துள்ளுவார். அதனை மாற்றிவிட்டால் பூரம் நீங்கிவிடும் என முதலமைச்சர் கொண்டுவந்த சட்டம் அரசியல் சட்ட இருட்டறையில் ஆதவனாய் ஒளிர்கிறது. அவர் கொண்டுவந்து சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட முன்வரைவு ஆளுநரின் அதிகாரத்தை அரசே மேற்கொள்வது என்பதாம். அதற்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்து, ஆளுநரைப் புறக்கணித்துப் பிறப்பித் துள்ள ஆணை வரலாற்று ஏட்டில் வைர வரிகளால் வரைய வேண்டிய நல்ல தீர்ப்பாகும். இந்தத் தீர்ப்பினைப் பெறத் தெளிவாகச் செயற்பட்ட முதலமைச்சர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அண்ணா சொன்னது போல் ஆளுநர் பதவி என்பது ஆட்டுக்குத் தாடியாகும் என்பதை உறுதிப்படுத்திவிட்டார்.

இத்துடன் நில்லாது, தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் பதவியில் இருந்து ஆளுநரை நீக்குதல் குறித்தும், வேந்தராக முதலமைச்சர் விளங்குதல் குறித்தும் முழுமையான சட்டத் திருத்தங்களை நடக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றினால் உயர்கல்வித் துறை உருப்பட வழியாகும். இல்லையேல் ஆளுநர் வழியாக ஒன்றிய அரசின் மறைமுகக் குறுக்கீடுகள் வருவதைத் தவிர்த்தல் இயலாது.

எனவே தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் தேக்க நிலையைப் போக்கி ஊக்க நிலையை உருவாக்கி ஆக்க நிலை பெறுவதற்கு முதலமைச்சர் அவர்கள் உரிய சட்டத் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றோம். தமிழகம் போராடும், வெல்லும் என்னும் தாரக மந்திரத்திற்கு ஏற்பத் தளராது செயல்படும் தளபதி முதல்வர் அவர்களுக்கும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் பங்காகும்.

இவ்வாறு .பேராசிரியர் மா.செல்வராசன் தெரிவித்துள்ளார்.


4ஆம் ஆண்டு நினைவு தினம்



மறைவு:
13.04.2021

எங்கள் அருமைத் தந்தையார், எங்களின் அன்பு தெய்வம்
முன்னாள் - திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்,
காரியாபட்டி ஒன்றிய திமுக செயலாளர், மாவட்ட கவுன்சிலர்
காரியாபட்டி - சித்தனேந்தல்
நினைவில் வாழும் கூ.பால்ச்சாமி அவர்களுக்கு
எங்கள் இதய அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்
உங்கள் நினைவுகளுடன்...
அக்ரி. கணேசன் M.Sc., (Agri) - ருக்மணி கணேசன், M.A., M.Phil., மதுரை
பா.இராஜேந்திரன் - இரா.வசந்தி, சித்தனேந்தல்
பா.ஜெயபெருமாள் - ஜெ.ஜெயா, சித்தனேந்தல்
பா.பொன்னையா I.A.S., - பொ.சினேகலதா B.E.,MBA., சென்னை
மா.முத்துலெட்சுமி - (நினைவில் வாழும்) டாக்டர். மாரியப்பன், காரைக்குடி
ச.சாந்தி நாச்சியார் - மு.சந்திரன், சித்தனேந்தல்
பேரன் பேத்திகள் மற்றும் உற்றார் உறவினர்கள், சித்தனேந்தல்





டாக்டர் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள்
ஏப்ரல் 14





- அண்ணல் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம்
- அம்பேத்கர் மணி மண்டபம்
- அம்பேத்கர் நூல்கள் தமிழில் மொழி பெயர்ப்பு
- அம்பேத்கர் முழு உருவ வெண்கலச் சிலை திறப்பு
- அம்பேத்கர் கலை மற்றும் சட்டக்கல்லூரி
- அம்பேத்கர் பெயரில் விருது
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களின் உயர்கல்வி கனவினை நனவாக்கும் பொருட்டு ரூ. 2.798 கோடி ஒதுக்கீடு

போன்ற எண்ணற்ற திட்டங்களை தொடங்கி வைத்து



அம்பேத்கர் மணி மண்டபத்தில் மாலை அணிவிக்கவும்
நந்தனம் எம்.சி.ராஜா விடுதி மாணவர்கள் தங்கிப் பயில
ரூ. 44.50 கோடியில் புதிய கட்டிடம் திறந்திட வருகைதரும்
தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர்
கலைஞர் வழியில் தந்து சமூக நீதியை நிலைநாட்டும்
ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலரே!
எங்களின் குடும்பத் தலைவரே!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களே!
எங்கள் உயிரே! வருக! வருக! வருக!
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்

பா.குழந்தைவேல் ✤ திருமதி கல்யாணி குழந்தைவேல்
கடலூர் கழக முன்னோடி கடலூர் கழக முன்னோடி
கு.வாஞ்சிநாதன்
தி.மு.க. தலைமைக் கழக சொற்பொழிவாளர்
கடலூர் மாவட்ட முன்னாள் தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர்
பா.தொல்காப்பியன், பா.இலக்கியன், நி.அதியமான், நி.தீபிகா
கிருத்திக்ராம் வாஞ்சிநாதன், ஏ.ஜீ.செம்மொழிப்பாவை, கடலூர்